மீது முடிவு எடுத்து, இரண்டாம் தளம், வட்டாட்சியர் அலுவலகத்திலே கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்தவுடன், தற்போதுள்ள அலுவலகத்தை சொந்தமான கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலுள்ள ஆர்.டி.ஓ. அலுவலகங்களில், வாகனங்களுக்கு நம்பர் பெறுவதற்கு, அல்லது 'லைசன்ஸ்' பெறுவதற்கு, மேலும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும், ஒரு குறிப்பிட்ட நாளுக்குள், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கப்படுமென்று அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளதைப் போல, நம்முடைய அரசும் ஒரு முறையைப் பின்பற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் இந்த முறை பின்பற்றப்படுகிறது என்ற விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. இருந்தாலும், அத்தகைய முறை பொது மக்களுக்கு வசதி செய்து தருகின்ற ஒரு முறையாக இருக்குமானால், நிச்சயமாக அதைப் பரிசீலித்து, இந்த அரசும் அதைப் பின்பற்றும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலே, தமிழகத்திலே, ஆர்.டி.ஓ. அலுவலகமோ அல்லது பிரிவோ, தொடங்குகிற திட்டம் உள்ளதா? ஆம் எனில், எங்கெங்கு தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கரூரில் புதிதாக ஏற்கெனவே இருக்கக்கூடிய 'மோட்டார் வெஹிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்' அலுவலகம் அந்த அலுவலகத்தை உயர்த்தி, ஆர்.டி.ஓ. அலுவலகமாக மாற்றக்கூடிய திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லவர் கோட்டம்

*1516 திரு. வீ. தமிழ்மணி:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாமல்லபுரத்தில் பல்லவர் கோட்டம் அமைக்க அரசு முன்வருமா?

1990 மே 9]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே,

மாமல்லபுரத்தில் பல்லவபுரம் சுற்றுலா வளாகம் மத்திய அரசு சுற்றுலாத்துறை நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை அறநிலையத் துறைக்கு சேர்த்தல்.

* 5483—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் அருகிலுள்ள அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள வனத்துறைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை அறநிலையத்துறைக்குச் சேர்க்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) தற்போது வனத்துறைக்கு எவ்வளவு பணம் கோவிலிலிருந்து குத்தகையாக கட்டப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இந்துசமய அறநிலையத்துறையால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 குத்தகை தொகையாக செலுத்தப்பட்டு வருகிறது.

9.10 மணி.

திரு. வி. சே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பன்னாரி திருக்கோயில் என்பது மிகப் பெரிய கூட்டம் கூடுகின்ற திருக்கோயில். கோடிக் கணக்கிலே வருமானம் வருகின்ற கோயில். ஆகவே, திருவிழாக் காலங்களில் மக்கள் இலட்சக்கணக்கிலே வருவதாலே, அந்தக் கோயிலைச் சுற்றி, வனத்துறை நிலம் இருக்கின்ற காரணத்தால் அவற்றை உடனடியாக அறநிலையத்துறைக்குச் சொந்தமாக்க முன்வருவார்களா? வனவிலங்குகள் எல்லாம் அதிகமாகத் திருவிழாக் காலங்களில் கோவிலுக்கே வந்துவிடுகின்றன. ஆகவே, அந்த இடத்தைக் கொடுத்தால், அவர்கள் சுற்றுச் சுவர் அமைத்து பொதுமக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.